செ.வெ.எண்: 46 நாள்: 16.03.2017

**குடுமியான்மலை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.27.20 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டட கட்டுமானப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் 15.03.2017 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு வேளாண்மைத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழகஅரசு குடுமியான்மலையில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு பல்வேறு புதிய கட்டடங்கள் கட்ட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் குடுமியான்மலை வேளாண்மை கல்லூரியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இதில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் நிர்வாக கட்டடம், ரூ.6.21 கோடி மதிப்பீட்டில் மாணவியர் விடுதி கட்டடம், ரூ.4.72 கோடி மதிப்பீட்டில் மாணவர் விடுதி கட்டடமும் கட்டப்பட்டு வருகிறது.

மேலும் பண்ணை அலுவலகம் மற்றும் பயன்பாட்டு கட்டடங்கள் ரூ.2.99 கோடி மதிப்பீட்டிலும், வளாக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப்பணிகளும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் பண்ணை கட்டமைப்பு வசதிகளும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு செயல்திறன் அமைப்பு கட்டமைப்பு வசதிகளும் என மொத்தம் ரூ.27.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்வேறு கட்டட கட்டுமானப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் போது கட்டுமானப்பணிகளில் தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், மேலும் பணிகளை விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர்.டி.செங்குட்டுவன், உதவி செயற்பொறியாளர் திரு.எஸ்.செல்வமணி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**